மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, லாபத்தினுடைய சதவீதத்தை குறைப்பது அந்த நிறுவனத்தினுடைய எஸ்டபிளிஸ்மெண்ட் செலவுகள், ஏறத்தாழ 610 விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் வெளிநாடுகளில் சிங்கப்பூர் உள்பட பல விற்பனை நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அந்த இடங்களுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை போன்ற பல்வேறு செலவினங்களுக்கு பணம் தேவைப்படுகிறது. ஒரு நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவர முடியாது. அப்படி இயங்கிக் கொண்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களே பின்னாலே ஒரு கேள்வியைப் போடலாம். ஆகவே அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட பால சேவிகாக்கள்.

97—(* வினா எண். 16884)—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2-5 வயது) பாலசேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது, நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை போடப்பட்டுள்ளது?

(இ) அவர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன்: (அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2-5 வயது) பாலசேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது நகர்ப்புறங்களில் 15,592 பேர்களும், கிராமப்புறங்களில் 93,982 பேர்களும் ஆக மொத்தம் 79,574 பேர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டனர்.

(ஆ) அவர்களில் நகர்ப்புறங்களில் 4,907 பேருக்கும் கிராமப்புறங்களில் 23,0 13 பேருக்கும் ஆக மொத்தம் 27,920 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

(இ) இவர்களுக்கு மாதம் ரூ. 175 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் இயங்கிடும் கால்நடை கிளை நிலையங்கள்.

98—(* வினா எண். 17361)—திரு. இரெ. இராசமாணிக்கம் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் இயங்கிவரும் கால்நடை கிளை மருத்துவமனைகள் அனைத்தும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றனவா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவாகளே, ஆக்கூர் கால்நடை கிளை நிலையம் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சொந்தக் கட்டிடத்திலும், தலைஞாயிறு கால்நடை கிளை நிலையம் யூனியனிடம் இருந்து பெற்ற வாடகையில்லாக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன. இதர 99 கிளை நிலையங்கள் இலவசக் கட்டிடங்களிலும், வாடகைக் கட்டிடங் களிலும் செயல்பட்டு வருகின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இயங்கிவருகிற கால்நடை கிளை நிலையங்களில் பெரும் பகுதி வாடகையில்லாமல் கிராமப் புற பகுதியில் உள்ளவர்களால் கொடுக்கப்பட்டு இருக்கிற கட்டடங்களில் நடத்தப்படுகின்றன. அவைகள் வசதியில்லாத கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களை அரசின் சார்பிலே சொந்தக் கட்டடங்களாக கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அந்த கிளை நிலையங்களில் பெரும்பகுதியான இடங் களிலே பணியாளர்கள் இல்லாமல் அவைகள் மூடப்பட்டிருக் கின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, 50 கிளை நிலையங்கள் இலவசக் கட்டடங்களிலும், 49 கிளை நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுமா என்று கேட்கிறார்கள். கிராமப்புறங்களில் சொந்தக் கட்டடங்கள் கொடுத்தாலும் சரியான முறையிலே அமைக்கவில்லை என்று அவர்கள் குறிப்பிடு கிறார்கள். புதிய கிளை நிலையங்கள் ஆரம்பிக்கிற போது கட்டடங்கள் கட்டுவதற்கு வரைமுறை கிடையாது. கிளை நிலையங்கள் கட்டுவதற்கு, நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. அதுசம்பந்தமாக தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர் கால்நடை கிளை நிலையங்களுக்கு நிலையான கட்டடங்கள் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பி இருக்கிறார்கள், என்று கால்நடை பராமரிப்பு துறை இயக்குநர் தெரிவித்து இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து பதில் கடிதம் வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்தில் கேட்டது பல இடங்களில் பணியாளர்கள் இல்லாமல் கிளை மருத்துவ மனைகள் மூடி வைக்கப்பட்டு இருக்கின்றன. பணியாளர்கள் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அது உண்மையா? மூடிவைக்கப் பட்டுள்ளவைகள் அனைத்தும் உடனடியாக இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை கொடுப்பார்களானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊரில் உள்ள பழையபள்ளி கிளை நிலையமான மருத்துவ மனை மூடிவைக்கப்பட்டு இருக்கிறது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இது சம்பந்தமாக மனு எழுதியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மூடிவைக்கப்பட்டுள்ள கிளை நிலையம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சொன்னார்கள். எனவே அதே என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் மூலமும் அந்த மாதிரி கிளை நிலையங்களை கட்டி முடிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு அந்த திட்டம் நிறைவேறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கடிதம் வந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்கள் வேலை வாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம்.

99—(* வினா எண். 18310)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?